**IN THE COURT OF THE LABOUR COURT, SALEM**

**ID. No.86/2015**

**Deposition of RW3**

Name : அர்ஷபாபு Husband / Father's Name :

Village : Taluk :

Caste : Religion :

Age : Calling :

Deposition of witness for the Petitioner / Respondent solemnly affirmed by Thiru. M. Raju, Bench Clerk Grade-I of this court on 18.11.2022 in accordance with Provisions X of Evidence Act 1872.

குறுக்கு விசாரணை

கிருஷ்ணகிரி புறநகர் கிளையில் எந்த தேதி முதல் நான் கிளை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் தேதி ஞாபகம் இல்லை ஆனால் கடந்த ஒன்றை வருடமாக பணிபுரிந்து வருகிறேன். நான் தலைமை அலுவலகத்தில் தொழிலாளர்களை பணி நியமனம் செய்யும் பிரிவில் எந்த பணியும் நான் செய்யவில்லை என்றால் சரி. எதிர்மனுதாரர் போக்குவரத்து கழகத்தில் தொழிலாளர்களுக்கு நிலையாணை சட்டம் தான் பின்பற்றப்படுகிறது என்றால் சரி. எதிர்மனுதாரர் கழகத்திற்கு சான்றளிக்கப்பட்ட நிலையாணை சட்டம் உள்ளது என்றால் சரி. சான்றளிக்கப்பட்ட நிலையாணையை நான் பார்த்திருக்கீறேனா என்றால் பார்த்து இருக்கிறேன். ஆனால் சான்றளிக்கப்பட்டட நிலையாணையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கிறேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் கழகத்திற்கு இதுவரை சான்றளிக்கப்பட்ட நிலைணையே இல்லை என்றால் தவறு. 30.12.1989 ன் தேதிய அரசு கடிதம் , 21.07.2005 ஆம் தேதிய அரசாணையில் உள்ள விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. மாவட்ட வேலை வாய்ப்பு

அலுவலகம் மூலம் பணி நியமனம் செய்ய அறிவுறுத்தப்பட்டது. மேற்சொன்ன அரசு கடிதத்திலும், அரசாணையிலும் வேலை வாய்ப்பு அலுவலகம் மூலம் வேலை வாய்ப்பு பற்றி அறிவிப்பு எதுவும் இல்லை என்றால் சரியல்ல. மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவுக்கு பதில் தாக்கல் செய்ய என்னிடம் நிர்வாகம் கருத்து எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் மனுதாரர் தாக்கல் செய்த மனு மற்றும் ஆவணங்கள் பற்றிய விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கில் மனுதாரர் பணி நிரந்தரம் கோரி கேட்காதநிலையில் என்னுடைய நிறுவன வாக்குமூலத்தில் மனுதாரர் பணி நிரந்தரம் கேட்டுள்ளதாக கூறியுள்ளது தவறானது என்றால் சரியல்ல. நிறுவன வாக்குமூலத்தில் தொழிற்தகராறு சட்டபிரிவுகளை சொல்லியுள்ளேன், அந்த பிரிவுகள் அதில் என்னென்ன வரையறை கூறியிருக்கிறது என்பதை தற்போது என்றால் கூற முடியுமா என்றால் இல்லை.15.05.2006 முதல் 1.10.2012 வரை நான் கிருஷ்ணகிரி புறநகர் கிளையில் பணிபுரிந்தேனா என்றால் மேற்பார்வையாளராக பகுதி காலம் பணிபுரிந்தேன். அந்த காலம் என்வென்று குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் முடியாது. நான் அந்த காலக்கட்டத்தில் பணியுரிந்ததை காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி., தேவையில்லை என்பதால் தாக்கல் செய்யவில்லை. கிளையில் ஓட்டுநர், நடத்துனருக்கு பணி ஒதுக்கீடு செய்து அதற்கான ஆவணங்களை யார் பராமரிக்கிறார்கள் என்றால் கட்டுப்பாட்டாளர் மற்றும் மேற்பார்வையாளர் பாராமரிக்கீறார்கள். 15.02.2006 முதல் 01.10.2012 ஆன காலத்திற்கு பணி ஒதுக்கிடு செய்யப்பட்டதற்கான பதிவேடுகள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. அந்த கிளையில் ஒவ்வொரு பேருந்திருக்கும் தனிதனி நேரம் குறித்த கால அட்டவணை உள்ளது என்றால் சரி. ஒவ்வொரு பேருந்திருக்கும் நடத்துனர் யார், ஓட்டுனர் யார் என்று பணி ஒதுக்கீடு செய்து அதற்கான பட்டியல் பராமரிக்கப்படுகின்றது. அதே போல் பேருந்து பனிமலையிலிருந்து வெளியே செல்லும் போதும் உள்ளே வரும் போது செட்

அவுட் செட்இன் பதிவேடு பராமரிக்கப்படுகிறது என்றால் சரி. அதே போல் பேருந்திருக்கு ட்டிரிப் சீட் பராமரிக்கப்பட வேண்டும் என்றால் சரி. நடத்துனரிடம் பயண பட்டியலில் என்னென் டிக்கெட்டுகள் கொடுக்கப்படுகிறது என்று பதிவு செய்து கொடுக்கப்படும் என்றால் சரி. முன் பின் தெரியாத நபரிடம் பேருந்தை கொடுத்தனுப்பி பேருந்தை இயக்கமாட்டோம் என்றால் சரி. பணியாளர்கள் தொடர்பான 12 (3) ஒப்பந்தத்தை நான் இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. நான் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் பணி காலையில் தொடங்கி மாலையில் முடிந்து விடும் என்று குறிப்பிட்டிருக்கிறேன் எனவே பேருந்துகள் அனைத்து மாலையிலேயே செட்இன் ஆகிவிடுமா என்றால் அந்ததெந்த வழிதடத்தை பொருத்து அமையும். தற்கால பணியாளர்களின் நலனில் முழு அக்கறை கொண்டு அவர்களை நிர்வாகம் காப்பாற்றி வருகிறது என்று நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். என்ன நலன் என்று குறிப்பிடப்பட முடியுமா என்றால் அவர்களுக்கு பணி நியமனம் செய்து சம்பளம் கொடுப்பதை பற்றி தான் குறிப்பிட்டுள்ளேன். தினக்கூலியை பொதுவாக யார் நிர்ணயம் செய்வார்கள் என்றால் தலைமை அலுவலகம் நிர்ணயம் செய்யும். பணி ஒதுக்கீட்டு பட்டியல், ட்ரிப் சீட் இன்வாய்ஸ் ஆகியவற்றில் எந்தெந்த ஓட்டுநர் மற்றும் நடத்துனர் பணி செய்துள்ளார்கள் என்பது தெரிய வரும் என்றால் சரி. பேருந்து இயக்கம் தொடர்பான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. தற்காலிக பணியாளர்களுக்கு தினசரி பணி நியமனம் உத்தரவும், பணி நீக்க உத்தரவும் கொடுப்போமா என்றால் இல்லை. சேரும் போது பணி நியமன ஆணை வழங்கப்படும். இந்த மனுதாரர் எவ்வளவு நாட்கள் எவ்வளவு நேரம் பணி செய்தார் என்பதை கூற முடியுமா என்றால் கூறமுடியாது. 2006 ஆம் ஆண்டிலிருந்து 2012 ஆம் ஆண்டு வரை எந்தெந்த காலத்தில் வேலை நிறுத்தம் நடைப்பெற்றது என்றால் தற்போது என்னால் சொல்லடுடியாது. நான் கிருஷ்ணகிரி புறநகர கிளையில் பகுதி காலம் மேற்பார்வையாளராக இருந்தேன்

என்று சொல்வதே பொய் என்றால் சரியல்ல., மனுதாரர் பணி விவரங்கள் எதுவும் தெரியாமலேயே தலைமை அலுவலகத்தில் தயார் செய்து கொடுத்த பிரமாண வாக்குமூலத்தை வைத்துக்கொண்டு பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. பணி நியமனம் சம்பந்தமான அரசு கடிதம் , அரசாணை மற்றும் விதிகளை நிர்வாகமே மீறி விட்டு தொழிலாளர்கள் மீது பழிசொல்வது சட்டவிரோதமானது என்றால் சரியல்ல.ஏற்கனவே நடந்த இது போன்ற தொழிற்தாவாக்கள் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு மனுதாரர் 15.05.2006 முதல் 01.10.2012 வரை எவ்வித பணி முறிவுமின்றி தொடர்ந்து பணி செய்துள்ளார் என்றால் சரியல்ல. மனுதாரர் பணிநீக்கத்திற்கு முந்தைய காலத்தில் 240 நாட்களுக்கு மேல் பணி செய்துள்ளார் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் சொல்லியுள்ள முதல் விசாரணை சாட்சியம் ஏற்றுகொள்ள கூடியதல்ல என்றால் சரியல்ல. அதனால் மனு பரிகாரத்தை எங்கள் நிர்வாகம் கடைமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

**Sd/-Tmt. S.Sumathy,**
**Presiding Officer,**
**Labour Court, Salem**